முழுப் பதிப்புரிமையுடையது /All Rights Reserved

பரீட்சைத் திணைக்களம்- A PLUS CAMPUS
Exam Department - A PLUS CAMPUS
විභාග දෙපාර්තමේන්තුව - A PLUS CAMPUS

தரம்–09 முதலாம் தவணைப் பரீட்சை , 2026
ශ්‍රේණිය-09 පළමු වාරය විභාගය, 2026
Grade-09 First Term Examination, 2026

| | | |
|---|---|---|
| வரலாறு<br>History | சுட்டெண்/Index No:……………… | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |

## பகுதி-I

**மிகப்பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

01. இலங்கையை வந்தடைந்த ஒல்லாந்தர் முதன் முதலாக சந்தித்த கண்டி அரசன்.
    1. விஜய இராஜசிங்கன்   2. கீர்த்திஸ்ரீஇராஜசிங்கன்
    3. 1ம் விமலதர்மசூரியன்   4. 2ம் விமலதர்மசூரியன்

02. போர்த்துக்கேயருடன் போரிட்டு ஒல்லாந்தர் கோட்டைகளை கைப்பற்றும் போது கி.பி 1658ல் கைப்பற்றப்பட்ட கோட்டைகள்.
    1. காலி, நீர்கொழும்பு   2. திருகோணமலை, மட்டக்களப்பு
    3. மன்னார், யாழ்ப்பாணம்   4. நீர்கொழும்பு, மன்னார்

03. கண்டியில் ஆட்சிசெய்த அரசர்களுள் “திரிசிங்களாதீஸ்வர” என்று தன்னை அடையாளப்படுத்திக்கொண்ட அரசன்.
    1. 1ம் இராஜசிங்கன்   2. 2ம் இராஜசிங்கன்
    3. 2ம் விமலதர்மசூரியன்   4. 4ம் விமலதர்மசூரியன்

04. நிரல் I ல் உள்ள அரசர்களையும், நிரல் IIல் உடன்படிக்கையை ஏற்படுத்திய தளபதிகளையும் இணைக்கும் போது பெறப்படும் விடை.

| நிரல் I | நிரல் II |
|---|---|
| 1. 2ம் விமலதர்மசூரியன் | A. அடம்ஸ் வெஸ்ர்வோல்ட் |
| 2. கீர்த்திஸ்ரீஇராஜசிங்கன் | B. லோறன்ஸ் பீல் |
| 3. 2ம் இராஜசிங்கன் | C. வில்லெம் பெல்க் இம்ஹோப் |

    1. BAC   2. BCA   3. ACB   4. CAB

05. 2ம் இராஜசிங்கமன்னனது காலத்தில் இடம்பெற்ற முக்கிய தூதுப்பயணமாக கருத்கூடிய விடயமானது.
    1. போர்த்துக்கேயரைத் துரத்துவதற்கு ஒல்லாந்தர் உதவி செய்தமை
    2. ஜெனரல் ஜெராட்ஹல்ப்ட் அரசணை சந்தித்தமை
    3. அரசனுக்கு தேவையான பரிசுப் பொருட்களை வழங்கியமை
    4. ஒல்லாந்தருடன் கடிதத்தொடர்பை கொண்டிருந்தமை

06. கி.பி 1753ல் உபசம்பதா விழாவை நடாத்தியதுடன் இலங்கையில் சீயம் நிக்காயாப் பிரிவை ஆரம்பித்த மன்னனாக கருதக்கூடியவன்.

1. விஜய இராஜசிங்கன் 2. இராஜாதி இராஜசிங்கன்
3. விக்கிரம இராஜசிங்கன் 4. கீர்த்திஸ்ரீ இராஜசிங்கன்

07. இந்து சமுத்திரத்தில் தமது வர்த்தக பலத்தை அபிவிருத்தி செய்ய, ஒல்லாந்தர் தமது வர்த்தக நிலையத்தை எங்கு அமைத்தனர்?

1. பத்தேவியா 2. கோவா 3. மதுரை 4. கல்கத்தா

08. குண்டசாலை இளவரசன் என பிரசித்தமடைந்த கண்டிய அரசன் யார்?

1. இரண்டாம் விமலதர்மசூரிய மன்னன் 2. ஸ்ரீ வீரபராக்கிரம நரேந்திரசிங்க மன்னன்
3. இரண்டாம் இராஜசிங்க மன்னன் 4. முதலாம் விமலதர்மசூரிய மன்னன்

09. கி.பி 1766 இல் ஒல்லாந்தருக்கு சாதகமான கருத்துக்களைக் கொண்ட உடன்படிக்கையை கண்டிய மன்னனுடன் கைச்சாத்திட்ட ஆளுநர்,

1. பரன் வென் 2. வில்லியம் பலெக் 3. கபன் ஏங்கல் பெக் 4. ஜெராட் ஹல்ப்

10. ஒல்லாந்து ஆட்சியாளரால் இலங்கை சமூகத்திற்கும் கலாசாரத்திற்கும் ஏற்பட்ட தாக்கமல்லாதது,

1. நீதிமன்ற முறை அறிமுகப்படுத்தப்பட்டமை.
2. புரட்டஸ்தாந்து மதம் கொண்டு வரப்பட்டமை.
3. தூண்கள், உயரமான கூரைகள் கொண்ட வீடுகள் அமைத்தமை.
4. பைலா கபிரிஞ்ஞா சங்கீதம் இந்நாட்டு கலைகளுள் ஒன்றிணைந்தமை.

**பகுதி-II**

01. கீழ்வரும் வரலாற்று நிகழ்வுடன் தொடர்புடைய எழுத்தினையும், அவை குறிக்கும் இடங்களையும் முறையே எழுதுக.




i. இலங்கையில் காணப்பட்ட இறுதி இராசதாணியும் எழுத்தும்
ii. ஒல்லாந்தர் முதன் முதலில் வந்திறங்கிய இடமும் எழுத்தும்
iii. 2ம் இராஜசிங்கனுடன் ஒல்லாந்தர் முரண்பட காரணமான கோட்டையும் எழுத்தும்.
iv. ஒல்லாந்தரது காலத்தில் வடபகுதியில் காணப்பட்ட கொகான்டரியும் எழுத்தும்
v. ஒல்லாந்தரிடமிருந்து பிரித்தானியர் கைப்பற்றிய கோட்டைகளுக்குள் இறுதியானதும், அதன் எழுத்தும்

A PLUS CAMPUS

02. 1. கி.பி 15ம் நூற்றாண்டின் பின்னர் இலங்கையை ஆட்சி செய்த ஐரோப்பிய இனத்தவர்கள் மூவரை குறிப்பிடுக.

2. கீழ்வருவனவற்றிக்கு பொருத்தமான விடை தருக.

A – 1ம் விமலதர்மசூரியனை சந்தித்த இரண்டாவது ஒல்லாந்து தளபதி

B – ஒல்லாந்தரின் கீழைத்தேய மத்திய நிலையம் அமைந்திருந்த தீவு

C – கலன் அல்ப்ஸ் என்ற ஒல்லாந்து தூதுவன் தொடர்பினை மேற்கொண்ட கண்டி அரசன்.

D – குண்டசாலை இளவரசன் என அழைக்கப்பட்ட கண்டி அரசன்

3. கி.பி 1638ல் கண்டி அரசனுடன் ஏற்படுத்திய உடன்படிக்கையின் அம்சங்கள் மூன்றினை குறிப்பிட்டு ஒன்றை சுருக்கமாக விளக்குக.

03. 1. 2ம் இராஜசிங்கனுக்கு பின்னர் ஒல்லாந்தர் தமது தூதுத் தொடர்பை கொண்டிருந்த கண்டி அரசர்கள் மூவரைத் தருக.

2. A – ஒல்லாந்தருக்கும் கண்டி அரசர்களுக்கும் இடையிலான தூதுத் தொடர்புகளின் போது முக்கியம் கொடுக்கப்பட்ட விடயங்கள் இரண்டு தருக.

B – 2ம் விமலதர்மசூரியனுடன் ஒல்லாந்தர் சமாதானமாக செயற்பட்டமைக்கு இரண்டு விடயங்கள் தருக?

3. தூதுப்பயணங்களின் போது ஒல்லாந்தர் மன்னனுக்கு வழங்கிய பொருட்கள் மூன்றினையும், அரசன் ஒல்லாந்தருக்கு வழங்கிய பொருட்கள் இரண்டினையும் தருக?

04. 1. ஒல்லாந்தர் ஆட்சியின் கீழ் இருந்த கொமாண்டரிகள் மூன்றினை குறிப்பிடுக.

2. ஓல்லாந்தர் தமது நீதிமன்ற நடவடிக்கைகளை செயற்படுத்துவதற்கு நிறுவப்பட்ட நீதிமன்றங்கள் நான்கினை தருக.

3. ஓல்லாந்தர் தமது மேலதிக இலாபத்தை பெற்றுக்கொள்வதற்கு மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினை குறிப்பிட்டு ஒன்றினை சுருக்கமாக விளக்குக.

A PLUS CAMPUS